பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 16 | வியாழக்கிழமை | 29.02.2024 | அதிர்வு 212

## தூக்கிலிட்ட நிலையில் குடும்பஸ்தரின் சடலம்

(த.சுபேசன்)

யாழ். தென்மராட்சி, சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் தூக்கிலிட்ட நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நுணாவில் பகுதியைச் 06



சாந்தனின் வரவை எதிர்பார்த்து யாழ். வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதியானைத் தாயார் வணங்குவதைப் படத்தில் காணலாம். எனினும், சாந்தன் நேற்றுக் காலை சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரச வைத்தியசாலையில் காலமானார்.

# எமது தாயின் நிலை இனிமேலாவது எந்தத் தாய்க்கும் வராமலிருக்கட்டும்

## சாந்தனின் சகோதரன் மதி சுதா உருக்கமான பதிவு

“இறுதியாக இந்த ஒன்றரை வருடமாகப் போராடியும் அண்ணனை என்னால் மீட்க முடியவில்லை. அண்ணாவின் மரணச் செய்தியை அம்மாவிடம் சேர்ப்பதற்கு 2 நாள்களாவது எனக்குத் தேவைப்படுகின்றது. அதுவரை அம்மாவைத் தனிமையில் வைத்திருக்கின்றேன். எமது தாயின் நிலை இனிமேலாவது எந்தத் தாய்க்கும் வராமலிருக்கட்டும்.”

- இவ்வாறு மறைந்த ஈழத் தமிழன் சாந்தனின் சகோதரன் மதி சுதா, உருக்கமான கருத்துக்களை தனது சமூக வலைத்தளத்தில் நேற்றிரவு பதிவிட்டுள்ளார். 06




சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரச வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை சாந்தனை அவரது சகோதரன் மதி சுதா சந்தித்த நெகிழ்வான தருணம்...

### சபாநாயகருக்கு எதிரான பிரேரணையைத் தோற்கடித்து

## அரசின் பலத்தை மீளவும் நிரூபித்துக் காட்டுவோம்

### அமைச்சர் பிரசன்ன முழக்கம்



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து அரசின் பலத்தை மீண்டும் நிரூபித்துக் காட்ட இது நல்லதொரு சந்தர்ப்பம் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் நகர அபிவிருத்தி மற்றும் 06




இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக அதன் உறுப்பினர்கள் இருவர் தாக்கல் செய்த வழக்குகளில் கட்சிக்கு எதிராகக் கட்டாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வழக்குகள் முதல் தவணைக்காக இன்று திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றங்களில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன.

இதற்காகக் கட்சியின் பிரமுகர்களான மாவை சேனாதிராஜா, சிறீதரன் 06






# சுமந்திரனின் தாயாரின் பூதவுடலுக்கு அரசியல் பிரமுகர்கள் நேற்று அஞ்சலி

கொழும்பில் காலமான, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் தாயார் புஷ்பராணி மதியாபரணின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் நேற்று அஞ்சலி செலுத்தியபோது...

**(மேலதிக படங்கள் 3ஆம் பக்கத்தில்...)**











# சுமந்திரனின் தாயாரின் பூதவுடலுக்கு அரசியல் பிரமுகர்கள் நேற்று அஞ்சலி









# யா/ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று

யாழ். ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 1.45 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் கந்தசாமி சிவனேசன் தலைமையில் இல்ல மெய்வல்லுநர் போட்டி ஆரம்பமாகின்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கணினிப் பொறியியலாளரும் டெக்கொரின் சொலூசன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அரியகுமார் சிறிகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை ஸ்ரீஇராமச்சந்திரனும், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கிருஷ்ணபிள்ளை பாக்கியநாதனும், மு/செம்மலை மகா வித்தியாலய ஆசிரியர் வாறித்தம்பி பிரபாகரனும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சரவணமுத்து சிதம்பரநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.








# இந்து சமுத்திரக் கப்பல் போக்குவரத்துக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் இலங்கை அர்ப்பணிப்புடன் இருக்கும்

## இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

“இந்து சமுத்திரத்தின் கப்பல் போக்குவரத்துச் செயற்பாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலான மூலோபாய நிலைப்பாடுகளைப் பேணுவதில் இலங்கை அர்ப்பணிப்புடன் இருக்கும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாத் பைண்டர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாட்டின் மூன்றாவது கட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நேற்று நடைபெற்றது.

உலகளாவிய பாதுகாப்பு மற்றும் விநியோகச் சங்கிலிக்குள் பிராந்தியத்தின் ஈடுகொடுக்கும் இயலுமைய வலியுறுத்தும் வகையில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவம் குறித்து ஆராயும் இந்த இரு நாள் மாநாட்டில் பல நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் –

“இலங்கையும், வலய நாடுகளும் முகம்கொடுத்திருக்கும் பிரதான பிரச்சினைகளில் ஒன்று தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பாத் பைண்டர் அமைப்பினால் இவ்வாறான களம் அமைக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்த அமர்வை ஏற்பாடு செய்தமைக்கும் வலயத்தின் பாதுகாப்பு தொடர்பில் காண்பிக்கும் தொடர்ச்சியான அக்கறைக்கும் மிலிந்த மொரகொடவுக்கும் பாராட்டு தெரிவிக்க வேண்டும்.

ஒரே தடம் – ஒரே பாதை வேலைத்திட்டம் அல்லது இந்து – பசுபிக் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்து சமுத்திரத்தைப் பார்க்க முடியாது. இந்து சமுத்திரம் தற்காலத்தில் உலக மூலோபாய அரசியல் வலயமாக மாறியுள்ளது. கடந்த 5 – 6 வருடங்களிலேயே அது நிகழ்ந்துள்ளது. இதுவரையான நிகழ்வுகளில் அதனை நாம் உறுதிப்படுத்த முடியும்.

அதேபோல், இந்தியா உலகின் மிகப்பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாடாக உருவெடுக்கப்போகிறது. 21 ஆவது நூற்றாண்டின் இறுதி வரையிலும் இந்தியாவின் வர்த்தக சந்தை விரிவடையும் என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர். இந்துனேசியாவும் மிகப்பெரிய பொருளாதார முன்னேற்றத்தை நோக்கிச் செல்கிறது.

அதன்படி இந்து சமுத்திய வலயம் தற்போது எழுச்சி காணும் பொருளாதார வலயமாக மாறியுள்ளது. இந்த நிலைமைக்கு மத்தியில் அதிகார மோதல்கள் அற்ற இந்து சமுத்திரத்தின் கப்பல் செயற்பாடுகளின் சுதந்திரத்தை மூலோபாய நிலைப்பாட்டிற்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படும்.

அதன்படியே செங்கடலின் முன்னெடுப்புகளுக்கும் இலங்கை ஒத்துழைக்க தீர்மானித்தது. தற்போதைய நிலைமைகளுக்கமைய முன்னெடுப்புகளுக்கான செலவுகள் அதிகரித்திருப்பதால் சுயஸ் கால்வாய் ஊடான கப்பல் போக்குவரத்து சுதந்திரத்தை பாதுகாப்பது அவசியமாகிறது. ஆறு நாள் யுத்தத்தின் விளைவாக சுயஸ் கால்வாய் மூடப்பட்டதால் 10 வருடங்களாக கொழும்பு துறைமுகம் நெருக்கடியை சந்தித்தது. அதனால் கடல் போக்குவரத்தில் சுதந்திரம் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.” – என்றார்.


















## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

போன்றோர் திருகோணமலையில் நேற்று முகாமிட்டிருந்தனர் என்று தகவல் கிடைத்தது.

வழக்குகளை அணுகுவது தொடர்பில் நேற்று முன்தினம் இரவு தமிழரசுக் கட்சியின் இதுவரை காலத்துக்குமான அரசியல் குழு நிகழ் நிலையில் உரையாடி இருந்தது.

திருகோணமலை வழக்கை வழக்காளி முன்நிபந்தனை ஏதுமின்றி இன்று விலக்கிக் கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டதாக கட்சியின் முக்கிய – மூத்த – வட்டாரங்கள் நேற்றிரவு கூறினாலும் எனக்கென்னவோ அதில் நம்பிக்கை இருக்கவில்லை.

விளையக்கூடிய விபரீதங்களை புரியாமல், கட்சியின் தலைவர்கள் விடயங்களை அணுகுகின்றார்கள் என்பது மட்டும் தெரிகின்றது.

இன்று வழக்குத் தவணையாக இருக்கும் போது, அது குறித்து நான் பிரஸ்தாபிப்பது பொருத்தமாக இருக்காது. நாளை வழக்குத் தவணை முடிந்ததும் விடயத்தை பார்க்கலாம்.

வழக்கு விடயத்திலும் சாண் ஏற முழம் சறுக்கும் நிலைமையே என்று நேற்று என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன் – அர்த்தத்துடன்தான்.

திருகோணமலையில் வழக்கை வாபஸ் பெறச் செய்ய வைக்கும் பல்முனை அழுத்தங்கள் தொடுக்கப்பட்டன, அந்த அழுத்தங்கள் இன்று நிச்சயம் வெற்றி தரும், வழக்கு வழக்காளியால் நிபந்தனையின்றி கை வாங்கப்படும் என்றெல்லாம் கட்சித் தரப்புகளில் பேச்சடிபட்டது.

அதேசமயம், யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் கட்சிக்கு எதிராக நேற்று முன்தினம் புதிதாக ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முல்லைத்தீவைச் சேர்ந்த கட்சி உறுப்பினரான இளைஞர் ஒருவர் இந்த வழக்கைத் தொடுத்துள்ளார் – சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் ஊடாக.

இந்த வழக்கும் முன்னைய வழக்குடன் இன்று யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்படுகின்றது.

இப்போதைய நிலையில் திருகோணமலையில் சாண் ஏறுவது போல தோன்ற, யாழ்ப்பாணத்தில் புதிய வழக்கினால் முழம் சறுக்கியிருக்கின்றது.

நீதிமன்றத்தில் போய் கட்சியின் யாப்புக்கு மாறாகத்தான் பல விடயங்கள் நடந்து விட்டன, ஆகவே ஆரம்பத்திலிருந்து எல்லாவற்றையும் நடத்துகின்றோம் என்று தவறை ஒப்புக் கொண்டு, விடயத்தை மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடங்குவோம் எனக் கட்சியின் உள்மட்ட கூட்டங்களில் சிறீதரன் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார் என அறிகிறேன்.

இது மிக மிக ஆபத்தான நகர்வு என்பது அவருக்குப் புரியவில்லை போலும். இன்று வழக்குத் தவணை முடிய அதன் விளக்கத்தைத் தருகிறேன்.

திருகோணமலை வழக்கிலும் எதிராளிகளாக குறிப்பிடப்பட்டுள்ள கட்சியின் பிரமுகர்கள் ஏழு பேருக்குமிடையில் ஓர் இணக்கமான நிலைப்பாடு இன்னும் எட்டப்பட்டதாகத் தகவல் இல்லை. இந்தச் சீத்துவத்தில் வழக்காளிக்கும் எதிராளிகள் தரப்புக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டு, வழக்கை வாபஸ் பெறுவதுதான் மிச்சம் என்ற கதை எங்கிருந்து வந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இணக்கத்துக்கு வருவதாயின் முதலில் அது தொடர்பில் எதிராளிகளுக்கு இடையில் ஓர் இணக்கம் வேண்டும் அல்லவா? எதிராளிகள் பிரிந்து நிற்கும் போது, வழக்காளி யாரோடு இணக்கம் காண்பார்?

இன்றைய வழக்குத் தவணையின் போது மாவை, சிறீதரன் போன்றோர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன் முன்னிலையாகின்றார் எனத் தெரிகின்றது. குற்றவியல் வழக்குகளையே அதிகம் கையாளும் ஜனாதிபதி சட்டத்தரணி தவராஜா அதன் காரணமாகவோ, என்னவோ இன்று எதிராளிகள் சார்பில் வழக்கில் முன்னிலையானாலும் ஜனாதிபதி சட்டத்தரணி புவிதரனின் நிலைப்பாட்டை அவர் பின்பற்றி நிற்பார் எனத் தெரிகிறது.

எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தன்னுடைய தாயாரின் இறுதி நிகழ்வுகளில் பங்குபற்றுகின்ற காரணமாக இன்று நீதிமன்றத்தில் பிரசன்னமாக மாட்டார். அவர் சார்பில் யாரேனும் சட்டத்தரணிகள் முன்னிலையாவார்களா என்பதும் தெரியவில்லை.

\+ \+ \+

உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் நாளைய தினம் ஓய்வு பெறுகின்றார், அவர் விசாரித்த பல வழக்குகளில் தீர்ப்புகள் – உத்தரவுகள் – வழங்கப்படாமல் நிலுவையாக நிற்கின்றன என்று நேற்றும் முன்தினமும் இந்தப் பத்தியில் சுட்டிக்காட்டி இருந்தேன்.

முஷாரப் எம்.பியின் பதவி நிலை பற்றிய வழக்கு, நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் சபாநாயகரின் செயற்பாட்டுக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு உட்பட இந்த நீதியரசரினால் வழங்கப்பட வேண்டிய மொத்தம் 15 வழக்குகள் தொடர்பான தீர்ப்புகள், உத்தரவுகள் இன்று அவரின் கடைசி வேலை நாளில் அறிவிக்கப்படும் என நீதிமன்ற வழக்குப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடைசி வேலை நாள் வரை இருந்துவிட்டு, கடைசி நாளில் 15 தீர்ப்புகளை அவர் படிக்கப் போகின்றார்.

ஒரு தீர்ப்பை ஒரு வரியிலும் வழங்கலாம், நீண்ட விளக்கங்கள், வியாக்கியானங்கள் சட்ட வாதங்களுடன் விவரமாகவும் வழங்கலாம்.

15 வழக்குகளில் ஒன்றாகத் தீர்ப்பு உத்தரவு வழங்குவதாயின் அவை எப்படி அமைந்திருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளட்டும்.

## தூக்கிலிட்ட நிலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சேர்ந்த 55 வயதான குடும்பஸ்தரே வீட்டு முற்றத்தில் இருந்த மரத்தில் தூக்கிலிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக மேற்படி நபர் தூக்கிட்டு உயிரை மாய்த்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

சடலம் மீதான பிரேத பரிசோதனை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

இந்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அரசின் பலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

“சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதனை அரசு தோற்கடிக்குமா? அதற்கான பெரும்பான்மைப் பலம் உள்ளதா?” என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

“நம்பிக்கையில்லாப் பிரேரணை வருவது நல்லது. அரசின் பலத்தை மீண்டும் நிரூபித்துக் காட்ட இது நல்லதொரு சந்தர்ப்பம். அதனை விவாதத்துக்கு எடுத்து மிக விரைவில் வாக்கெடுப்புக்குச் சென்றால் நாடாளுமன்றத்தில் அரசு தனது பலத்தைக் காட்ட முடியும்.” – என்றார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்துமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அல்ல, வேட்பாளர்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியாது. ரணில் விக்கிரமசிங்க அதைக் கேட்பாரா? இல்லையா? என்பது எங்களுக்குத் தெரியாது. ரணில் விக்கிரமசிங்கவை இந்த நாட்டின் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் ஆக்கியது பொதுஜன பெரமுனதான். அவர் பணியைச் சரியாகச் செய்ததை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனவே, மொட்டுக் கட்சியாக ரணில் விக்கிரமசிங்க வந்தால் நல்லது என நினைக்கின்றேன். சுயேச்சை வேட்பாளராக வந்தால் இன்னும் நல்லது. அப்போது பயமின்றி தெளிவாக வேலை செய்யலாம்.” – என்றார்.

## எமது தாயின் நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைபெற்றுவிடுதலையானசாந்தன் என்றழைக்கப்படும் சுதேந்திரராஜா (வயது 55) நேற்று திடீரென உயிரிழந்தார். கல்லீரல் பாதிப்பால் சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்றிரவு இலங்கை வரவிருந்த நிலையிலேயே காலை 7.50 மணியளவில் மாரடைப்பால் காலமானார்.

சாந்தன் நாடு திரும்பவிருந்த நிலையில் நேற்று திடீரென மாரடைப்பால் உயிரிழந்தமை அவரின் குடும்பத்தை மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழர்களையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. விழிநீரைப் பெருக்கெடுக்க வைத்துள்ளது.

இந்நிலையில், அவரின் சகோதரன் மதி சுதா மேற்கண்டவாறு உருக்கமான பதிவை இட்டுள்ளார்.




# புதிய இந்தியத் துணைத் தூதர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்றுச் சந்தித்தார். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், மக்களின் தேவைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் இதன்போது இந்திய துணைத் தூதுவருக்குத் தெளிவுபடுத்தினார்.

அதற்கமைய, வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் என புதிய இந்தியத் துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி தெரிவித்தார். இளைஞர், யுவதிகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சிகளை பெற்றுக்கொடுக்கவும், தீவுகளுக்கான படகு சேவையை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான வசதிகளை ஒழுங்கு செய்வதுடன், தரை மற்றும் கரையோர தூய்மை திட்டத்திற்கு தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் கூறினார்.

தூய்மை திட்டத்திற்கு தேவையான நிதியை இந்திய துணை தூதரகத்திலிருந்து ஒதுக்கவும் நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி உறுதியளித்தார்.



# விசேட அதிரடிப் படையினருடன் துப்பாக்கிச் சமரில் ஒருவர் சாவு!

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் நபரொருவர் சூரியவெவ பகுதியில் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் வீடொன்றில் மறைந்துள்ளார் என நேற்று முன்தினம் இரவு தகவல் கிடைத்திருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், சந்தேகநபரைக் கைது செய்வதற்காக அங்கு சென் றுள்ளனர்.

இதன்போது இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எல்பிட்டிய – வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த 44 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மஹறபாகே பகுதியில் கடந்த 21 ஆம் திகதி ஒருவரை சுட்டுக் கொலை செய்தமை மற்றும் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வெல்லம்பிட்டிய பகுதியில் ஒருவரை சுட்டுக் கொலை செய்தமை ஆகிய சம்பவங்களில் அவர் சந்தேகநபராகக் காணப்படுகின்றார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிரச்சினைக்கு மூலம் எது?

பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான - களைவதற்கான - மார்க்கங்களில் பிரதானமானது வெளிப்படையாகக் கலந்துரையாடுவதாகும்.

உண்மைகளை - யதார்த்தங்களை - திறந்த மனதுடன் பேசினால் பல சிக்கல்களை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும்.

நாட்டில் கடந்த எழுபத்தியைந்து ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இழுபடும் தேசிய இனப் பிரச்சினையை தீர்க்கும் விடயத்துக்கும் இந்த அணுகுமுறை பொருந்தும்.

ஆனால்சம்பந்தப்பட்டதரப்புகள்வெளிப்படையாகவும் உண்மையாகவும் நேர்மையாகவும் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்குத் தயார் இல்லை என்பதுதான் இங்கு பிரதான பின்னடைவு நிலைமையாகும்.

இலங்கைத்தீவு இன்று இப்படி மோசமான நிலைமைக்கு - பொருளாதாரப் பின்னடைவு நெருக்கடிக்கு - சென்றமைக்குக்காரணம் இந்த நாட்டை ஆட்டிப்படைத்த யுத்தமும் அதன் விளைவுகளும்தான் என்ற உண்மையைக் கூட இலங்கைத் தலைவர்கள் ஒப்புக்கொள்ளாமல் பின்னடித்து நிற்கின்றனர்.

அதை ஒப்புக் கொண்டால் பொருளாதார நெருக்கடியில் இருந்து நிரந்தரமாக மீளுவதற்காகத் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான - நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய - தீர்வு கண்டாக வேண்டும் என்ற உண்மையையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதால், அந்த விவகாரத்தைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள அவர்கள் முன் வருகின்றார்கள் இல்லை.

ஆயினும் போரினால்தான் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது என்ற உண்மையை இலங்கையின் இராஜாங்க அமைச்சர் ஒருவர் இந்தியாவில் வைத்து ஒப்புக்கொண்டுள்ளார் என இப்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சின் பங்களிப்புடன் புதுடில்லியில் நடைபெற்ற புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார கலந்துரையாடல் *(Raisina Dialogue)* சபையில் கருத்து வெளியிட்ட, இலங்கையின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவே, இலங்கையில் அதிகரித்த யுத்தச் செலவு எவ்வாறு அபிவிருத்திக்குத் தடையாக இருந்தது என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

"1985இல் எங்களின் பாதுகாப்புச் செலவு 18 கோடி 80 லட்சம் அமெரிக்க டொலர்களாக இருந்தது. ஆனால் 2008இல் யுத்தத்தின் முடிவில் இந்தச் செலவு 150 கோடி அமெரிக்க டொலர்களாக உயர்ந்தது" என தாரக பாலசூரிய அங்கு கூறியிருக்கின்றார்.

இலங்கை நாட்டின் தேசியவாதம் 'சில சமூகங்களை' ஆயுதப் போராட்டத்திற்குள் தள்ளியது என்பதையும் இராஜாங்க அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்.

பௌத்த - சிங்களப் பேரினவாதமே இந்த மோசமான நிலைமை ஏற்படக் காரணம் என்பதை 'நாட்டின் தேசியவாதம்' என்ற குறியீட்டுச் சொல் மூலம் அவர் குறித்துரைக்கின்றார் எனக் கொள்ளலாம்.

அதிகாரப் பகிர்வின்றி இலங்கையை அபிவிருத்தி செய்ய முடியாது என்று அவர் அங்கு குறிப்பிட்டிருக்கின்றார்.

"சில சமூகங்களுக்கு எதிராக பாகுபாடு காட்டியமை அவர்களை ஆயுதம் ஏந்த வழிவகுத்தது. வளர்ச்சி என்பது சமூகத்தின் சில பிரிவுகளுக்கு மட்டுப்படுத்தப்பட முடியாது. அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். நாம் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளாவிட்டால், பெரும்பான்மைவாதம் என்ற துருப்புச் சீட்டை, அரசியல்வாதிகள் பயன்படுத்தி, குறிப்பிட்ட சமூகங்கள் மற்றும் பிரிவினரின் ஆதரவை பெற்றுக்கொள்ள முயற்சிப்பார்கள். இது கவனிக்கப்பட வேண்டும்."- என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கைஎதிர்நோக்கும்பொருளாதார நெருக்கடிக்கு தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமும், வடக்கு, கிழக்கில் இன்னமும் தொடரும் இராணுவ மயமாக்கலும் தான் பிரதான காரணம் என ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதிகளும், போரினால் பாதிக்கப்பட்ட சமூகத் தலைவர்களும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தாலும், தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவங்கள் அதனை இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது செய்தி விமர்சகர்களால் சுட்டப்படுகின்றது.

தென்னிலங்கையின் சில தலைவர்கள் எப்போதாவது இருந்து விட்டு இந்த உண்மையை வெளிப்படையாக கூற முனைந்தாலும், தெற்கின் இனவெறிப் போக்குக் கட்டமைப்பில் அந்த குரல் செவிடன் காதில் ஊதிய சங்காக - புறக்குடத்து நீராக - வீணாகி போவதுதான் வழமை. இப்போதும் ராஜாங்க அமைச்சர் தாரக பால சூரியாவின் கருத்தும் அப்படித்தான் ஆகியுள்ளது.



# சாந்தனின் உடலுக்கு நளினி, சீமான், திருமாவளவன் உள்ளிட்டோர் அஞ்சலி

இந்தியாவின் – தமிழ்நாடு ராஜீவ்காந்தி மருத்துவமனையில் உயிரிழந்த சாந்தனின் உடலுக்கு நளினி, சீமான்,

திருமாவளவன் உள்ளிட்ட பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

கடந்த ஜனவரி 24 ஆம் திகதி சாந்தனுக்கு உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டதையடுத்து திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயர் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இதன்படி, அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று காலை உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், ராஜீவ் காந்தி மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த சாந்தனின் உடலை பார்ப்பதற்கு நளினி அங்கு சென்றிருந்தார்.

இதேவேளை, நீதிமன்றம் விடுவித்த பிறகும் அகதிகள் முகாமில் மூன்று பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தேச நலனுக்கு எதிரானது என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

உடல்நலக்குறைவினால் காலமான சாந்தனின் உடலுக்கு தமது கட்சியின் நிர்வாகிகளுடன் திருமாவளவன் அஞ்சலி செலுத்தியதன் பின்னர், அவர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த 2022 விடுதலையான 4 பேரும் தங்களுடைய தாயகத்துக்கு திரும்பவில்லை. சிறையில் இருந்து விடுதலை பெற்றாலும் அவர்கள் வீட்டுக்கு செல்ல முடியாமல் இருந்து வந்தார்கள். சிறப்பு முகாம் என்ற பெயரில் எந்த வசதியும் இல்லாத ஒரு இடத்தில் சாந்தன், முருகன், ஜெயக்குமார், ரொபர்ட் ஆகிய நால்வரும் அடைக்கப்பட்டனர். சாந்தன் தன்னுடைய தாயகத்திற்கு உயிருடன் திரும்ப வேண்டும் என போராடி வந்தார்.

உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் கூட அவர் அவருடைய சொந்த நாட்டுக்கு அனுப்பப்படவில்லை என்பது வேதனைக்குரியது. சாந்தனுடைய உடலை ஈழத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அவர்களுடைய உறவினர்கள் இங்கு வந்துள்ளார்கள். சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள மீதியுள்ள மூவரையும் அவரவர் விரும்புகின்ற பகுதிகளில் தங்க மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்.

பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன் ஆகியவர்கள் தங்கள் குடும்பத்தினரோடு வசித்து வருகிறார்கள். அது போலவே மீதமுள்ளவர்களையும் உடனடியாக தங்கள் குடும்பத்தினரோடு இருக்கக் உத்தரவு தர வேண்டும். உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு பிறகும், சிறையில் இருந்து விடுதலை ஆன பிறகும், தேச நலன் கருதுகிரோம் என்ற பெயரில் சிறப்பு முகாமில் வைப்பது இயற்கை நீதிக்கு எதிரானது”– என்றார்.

அத்துடன், சாந்தனின் மறைவுச் செய்தியை அறிந்து நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், திரைப்பட இயக்குநர் மு.களஞ்சியம் மற்றும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான பேரறிவாளன் ஆகியோரும் சென்னை ராஜீவ் காந்தி அரச பொது மருத்துவமனைக்கு சென்று சாந்தனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

சாந்தன் உடலுக்கு அஞ்சலி செலுத்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு சென்றிருந்தார். அப்போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

“ஈழத் தமிழர்களின் வாழ்வில் துன்பமும், துயரமும், மரணமும் தொடர்ந்து கொண்டே உள்ளது. சாந்தன் சிறையில் இருந்த போது வருத்தப்படாதீர்கள் என எனக்கு தைரியம் சொன்னவர். 32 ஆண்டுகள் தமிழ்நாட்டில் எந்த குற்றமும் செய்யாமல் சிறையில் வாடி வதங்கியவர் சாந்தன். அவர் தலை சிறந்த எழுத்தாளர், கேப்டன் பிரபாகரணின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்.

முருகன், ஜெயக்குமார், ரொபர்ட், பயாஸ் ஆகியோர் சிறையில் இருக்கிறார்கள். அவர்களை விடுவித்து எந்த நாட்டிற்கு போக வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அந்த நாடுகளுக்கு அனுப்ப தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை வைக்கிறேன். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதானவர்கள் வாழ்க்கையின் வசந்தம் எதையும் பார்க்கவில்லை. சாந்தனுடைய தாயார் என்ன பாடுபட்டு கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை?

எந்தவித குற்றமும் செய்யாமல் நிரபராதிகளாகிய நளினி, முருகன், சாந்தன், ஜெயக்குமார் உள்ளிட்டோர் சிறையில் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்கள். என்றைக்கும் தமிழீழ வரலாற்றில் சாந்தனுடைய பெயர் இருக்கும்” – என்றார்.





# ஜார்க்கண்டில் பயணிகள் மீது ரயில் மோதி விபத்து; 12 பேர் பலி

ஜார்க்கண்ட் மாநிலம் ஜம்தாரா மாவட்டத்தில் உள்ள கலா ஜாரியா ரயில் நிலையம் அருகே பயணிகள் மீது ரயில் மோதிய விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை இருவரது உடல் மீட்கப்பட்டுள்ளன. இதனை அந்த மாவட்ட நிர்வாகம் உறுதி செய்துள்ளது.

வித்யாசாகர் மற்றும் காசிதர் இடையே செல்லும் ரயில் கடந்த புதன்கிழமை இரவு 7 மணி அளவில் கலா ஜாரியா ரயில் நிலையம் அருகே நின்றுள்ளது. அந்த ரயிலின் சங்கிலி இழுத்தப்பட்டுள்ள காரணத்தால் நின்றுள்ளது. இந்த சூழலில் அந்த வண்டியில் இருந்து பயணிகள் சில கீழ் இறங்கியுள்ளனர். அவர்கள் மீது மற்றொரு ரயில் மோதியது. இதில் இதுவரை இரண்டு பேரில் உடல் மீட்கப்பட்டுள்ளது. இதர பயணிகளின் நிலை குறித்த விவரம் தெரிவிக்கப்படவில்லை. இதனை ரயில்வே நிர்வாகம் உறுதி செய்துள்ளது.

பயணிகள் எதிர் திசையில் இறங்கி, ரயில் தடத்தின் மீது நடந்து சென்றதே இந்த விபத்துக்கு காரணம் என சொல்லப்படுகிறது. சம்பவ இடத்துக்கு மருத்துவ குழுவும் , ஆம்புலன்ஸ் வாகனமும் விரைந்துள்ளது. அங்கு ரயில்வே பாதுகாப்பு படையினரும், பொலிஸாருடன் இணைந்து மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்து மிகுந்த வருத்தத்தை தந்துள்ளதாக ஜார்க்கண்ட் மாநில முதல்வர் சம்பாய் சோரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவும் தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.



# உலகிலேயே மூன்றாவது பாரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும்

## ஜனாதிபதி திரௌபதி முர்மு தெரிவிப்பு

எதிர்வரும் 2030 ஆண்டுக்குள் உலகின் மூன்றாவது பாரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும் என அந்த நாட்டு ஜனாதிபதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் மத்திய பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இளைஞர்கள் இந்தியாவின் பெரும் சக்தியாக உள்ளனர்.

உலகிலேயே அதிக இளைஞர்களைக் கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

இந்தியாவின் பொருளாதாரம் இன்று உலகில் ஐந்தாவது இடத்தில் உள்ளது.

எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள், இந்தியா உலகின் மூன்றாவது பாரிய பொருளாதாரமாக மாறும்.” – என்றார்.

அதேநேரம் இந்தியாவை 2047ஆம் ஆண்டு உலகின் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றியமைப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் சமூகத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புவதில் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் முக்கியப் பங்குள்ளதாக இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.




# பெண் தொழில்முனைவோரை வலுவூட்டுவதற்கான விரிவான திட்டத்தை அரசாங்கம் உருவாக்கியுள்ளது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“நாட்டில் ஏற்படுத்தப்படவிருக்கும் பொருளாதார மாற்றத்திற்கு ஏற்றவாறு பெண் தொழில் முனைவோரை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது. டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத் துறைக்குள் பெண் தொழில்முனைவோர் பெரும் பங்கை ஆற்ற முடியும் “

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ‘சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான விருது விழா – 2023’ இல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைப் பெண்கள் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விருது விழாவில் சிறந்த பெண் வர்த்தகர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவர்களின் வியாபாரம், சந்தை பிரவேசத்தை வலுவூட்டும் நோக்கில் இந்த விருது வழங்கப்பட்டதோடு, சார்க் வலயத்தை சேர்ந்த பெண்களுக்கு விசேட பிரிவில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பத்து சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் –

“கடந்த சில வருடங்கள் சுமுகமானவையாக இருக்கவில்லை. வர்த்தகர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நெருக்கடியான காலகட்டமாக அமைந்திருந்தது. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தொழிலை முன்னெடுத்துச் செல்ல நீங்கள் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியது.

2024 ஆம் ஆண்டில் ஓரளவு பொருளாதார வளர்ச்சி ஏற்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் கடைசி இரண்டு காலாண்டுகளில் சாதகமான பொருளாதார வளர்ச்சியை எம்மால் அடைய முடிந்தது. ஆனால் 2018 ஆம் ஆண்டில் இருந்த பொருளாதார வளர்ச்சியை இன்னும் எட்ட முடியாதுள்ளது. அதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் தேவைப்படும்.

கடந்து வந்த பொருளாதார நெருக்கடியின் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தும் முதல் வருடம் இதுவாகும். அதற்காக பல கடினமாக தீர்மானங்களையும் எடுக்க வேண்டியிருந்தது.

அனைவரும் வாழக்கூடிய பொருளாதார சூழலை உருவாக்க வேண்டும். தற்போது பணத்தை அச்சிடவோ, கடன் வாங்கவோ முடியாது. அதனால், வரி சேகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ரூபாயை பலப்படுத்தி, பணவீக்கத்தைக் குறைப்பதே எமது இலக்காகும்.

பழைய பொருளாதார அடிப்படையில் நாட்டை முன்னேற்ற முடியாது. அதனால், நாட்டில் விரைவான பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஒரு புதிய பொருளாதார முறையில் நாடு கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக போட்டித்தன்மை நிறைந்த ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். மேலும், அரசாங்கம் என்ற வகையில் வர்த்தகர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கும். அதற்காகவே ‘பாராட்டே’ சட்டத் திருத்தச் செயற்பாடுகளும் இவ்வருட இறுதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)












# பெண் தொழில்முனைவோரை வலுவூட்டுவதற்கான விரிவான திட்டத்தை அரசாங்கம் உருவாக்கியுள்ளது

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெண் வர்த்தகர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பைச் செய்கிறார்கள். இவர்களுக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் அரசாங்கம் வழங்கும்.

மேலும், பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக உங்கள் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. பெண்களை வலுவூட்டுவதால் நாட்டின் பொருளாதாரத்தைக் கணிசமான அளவில் பலப்படுத்த முடியும். மேலும், பெண்களை தொழில்முனைவோராக மாற்றுவதற்கான விரிவான திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு பெண்களால் பெரும் பங்காற்ற முடியும். எனவே நாட்டின் பொருளாதார மாற்றத்திற்கு பெண்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. எதிர்காலத்தில் டிஜிட்டல்,பசுமைப் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு பெண் தொழில் முனைவோரைத் தயார்படுத்துவதற்கான திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது.

இன்று, பல பெண்கள் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அதே போல், நாட்டின் சுற்றுலாத் துறையும் கணிசமாக முன்னேற்றம் கண்டுள்ளது. அதற்கான அதிக வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வலுவான தொழில் முனைவோரை உருவாக்க முடியும். சுற்றுலாத் துறையை சரியான முறையில் மேம்படுத்த வேண்டும். அதற்கான சேவைகளை வழங்கும் தொழில்முனைவோருக்கு ஆதரவளிக்க அரசாங்கம் தயாராக உள்ளது. சுற்றுலா வணிகத்தில் ஒருவரின் நாளாந்த வருமானம் குறைந்தபட்சம் 500 டொலர் வரையில் அதிகரிக்க வேண்டும். அந்தப் பொறுப்பு பெண் வர்த்தகர்கள் சங்கத்தையும் சார்ந்துள்ளது.

விவசாயத்துறையை நவீனமயமாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எதிர்காலத்தில் இத்துறைசார் தொழில் முனைவோருக்கு அதிக கேள்வி இருக்கும். உலகம் தொழில்நுட்பத்துடன் முன்னேறும்போது, நாமும் அதற்கமையவே முன்னேற வேண்டும்.

நாம் ஒரே இடத்தில் நிற்க முடியாது. புதிய தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தை நாங்கள் ஏற்கனவே அமைத்துள்ளோம். அந்தச் செயற்பாட்டை தொடர்ச்சியாக முன்னெடுத்தால் இலங்கையின் பொருளாதாரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டுச் செய்ய முடியும்.

தற்போது மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனால் காணி உரிமை பெற்றுகொள்ளும் 20 லட்சம் பேரின் பங்களிப்பு நேரடியாக பொருளாதாரத்திற்கு கிடைக்கும். அதன்படி, விவசாய நவீனமயமாக்கல் முயற்சிகளுக்கும் அவர்களின் நேரடி பங்களிப்பைப் பெற முடியும். வலுவான பொருளாதாரத்தை கொண்ட இலங்கையை உருவாக்கும் நோக்கிலேயே இந்த அனைத்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.” – என்றார்.













# நல்லிணக்கத்தின் ஊடாக அபிவிருத்தியை அடைவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்

## சர்வ மத மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“இனவாதம் மற்றும் மதவாதத்தை ஒதுக்கிய, உலகின் அனைத்து நாடுகளும் விரைவான அபிவிருத்தியை அடைந்துள்ளன. நல்லிணக்கத்தின் ஊடாக அபிவிருத்தியை அடைவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ‘நல்லிணக்கத்துக்கான மதங்கள்’ தேசிய சர்வமத மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

17 மாவட்டங்களை உள்ளடக்கி 3 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்ட ‘மோதல்களைத் தவிர்ப்பதற்கான பன்முக நடவடிக்கைகள்’ திட்டத்தின் நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த சர்வமத மாநாடு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.




இந்த நிகழ்வின் போது மாவட்ட பிரதிநிதிகள் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில் –

“மதத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் உள்ள தொடர்பை நாங்கள் நன்கு அறிவோம். எங்களுக்கு இனவாதம் மற்றும் மதவாதம் பற்றிய அனுபவம் உள்ளது. இதன் விளைவாக, நாங்கள் ஒரு பயங்கரமான போரை எதிர்கொண்டோம். யுத்தம் முடிவடைந்த பின்னர் சகவாழ்வு தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் அனைத்து மதத் தலைவர்களுக்கும் பெரும் பொறுப்பு உள்ளது. நம் எண்ணங்களில் கவனம்

**(14ஆம் பக்கம் பார்க்க)**






# நல்லிணக்கத்தின் ஊடாக அபிவிருத்தியை அடைவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்த வேண்டும். அரசியல்வாதிகளின் எண்ணம் அதிகாரத்தைப் பெறுவதிலே உள்ளது. அந்தந்த இடங்களில் இருக்க வேண்டும் என்பதே மதத் தலைவர்களின் சிந்தனை. இதற்கெல்லாம் குறுக்குவழி இனவாதம் மற்றும் மதவாதமாகும். 1930 முதல் நம் நாட்டில் இது நடந்து வருகிறது. இறுதி முடிவு என்ன என்பதை நான் குறிப்பிடத் தேவையில்லை.

உதாரணமாக, சிங்கப்பூரில் இனவாதமோ மதவாதமோ இல்லை. பல மொழிகள் பேசுவோர் இருந்தாலும், சிங்கப்பூர் இன்று துரித வளர்ச்சியை அடைந்துள்ளது.

தற்போது யுத்தம் இல்லாததால் நாட்டின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகின்றது. எனவே சகவாழ்வில் கவனம் செலுத்த வேண்டும். இதுபற்றி நாடாளுமன்றத்திலும் ஆராய்ந்து வருகிறோம். இலங்கையில் தேசிய மற்றும் மத சகவாழ்வை உறுதிப்படுத்தும் குழுவின் தலைவராக கரு ஜயசூரிய செயற்பட்டார். 2018 மார்ச்சில் முஸ்லிம்கள் தொடர்பான மோதல்கள், 2017 இல் காலியில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் 2014 இல் பேருவலயில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பில் மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இந்தத் தெரிவுக் குழுக்களால் பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. அந்த முன்மொழிவுகளை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டோம். நாங்கள் ஒரு குழுவாக இணைந்து பணியாற்றினோம். அப்படியானால், அந்த உடன்பாட்டின்படி நாம் நடக்க வேண்டும்.

கடந்த ஆண்டு இறுதியில் பல பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் தமிழ் தலைவர்கள் இமயமலைப் பிரகடனத்தை கையளித்தனர். அந்த அறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு வருகிறோம். தற்போது நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான கடைசிப் பகுதியில் இருக்கிறோம். குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் எம்.பி.க்களுடன் இது குறித்து ஆலோசித்து வருகிறோம். எஞ்சியுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். காணாமற்போனோர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் அறிவிப்போம். மேலும், இது தொடர்பாக சிறையில் இருந்த சிலரை விடுவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதே இப்போதுள்ள பிரதான கேள்வியாகும். இதற்காக, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைப்பதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளோம். காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுவின் பல அறிக்கைகள் உள்ளன. அவை தொடர்பில் ஆராய்ந்து நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸிடமிருந்து தனியொரு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் வரைவை நாங்கள் நிறைவேற்றிய பின்னர், தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா இந்த வேலைத் திட்டங்களுக்கு தனது ஆதரவை வழங்குகிறார் என அறிவித்தார். ஏனைய நாடுகளிடமிருந்தும் அதற்கான உதவிகள் கிடைக்கின்றன. அதற்கமையவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் பின்னர் அரசியல் பிரச்சினைகள் உள்ளன. காணிப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வசிக்கும் கிராம மக்களுக்கும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. வவுனியா, திருகோணமலை, பொலன்னறுவை, மஹியங்கனை உள்ளிட்ட பிரதேசங்களிலும் இவ்வாறான பிரச்சினைகள் உள்ளன.

அனைத்து தரப்பினரையும் அழைத்து, இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வைத் தேட எதிர்பார்க்கிறோம். 1985 வரைவின்படி செயற்படுமாறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன். மேலும், அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் தமிழ் கட்சிப் பிரதிநிகளைச் சந்தித்து இது குறித்து கலந்துரையாடவுள்ளேன். பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடியதன் பின்னர் மேலும் பல காணிகளை விடுவிக்க இணக்கம் தெரிவித்துள்ளனர். இதே முறையில் முன்னோக்கிச் செல்ல முடியும்." – என்றார்.





# அஸ்வெசும பயனாளிகளின் எண்ணிக்கை ஜூன் மாதம் முதல் 24 லட்சமாக உயரும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு



"அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்காக விண்ணப்பித்த பயனாளிகளின் தரவு சரிபார்ப்பு மற்றும் சான்றுபடுத்தல் பணிகள் நிறைவடைந்துள்ளன. அஸ்வெசும பயனாளிகளின் குடும்ப அலகுகளின் எண்ணிக்கையை ஜூன் மாதம் முதல் 24 லட்சமாக அதிகரிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன."

– இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அஸ்வெசும முதல் கட்ட கணக்கெடுப்பில், 34 லட்சம் குடும்ப அலகுகளின் தகவல்கள் சரிபார்க்கப்பட்டன. இதன்படி 19 லட்சம் குடும்பங்கள் பயன் பெற தகுதி பெற்றுள்ளன. இதுவரை பெறப்பட்ட மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளின் அடிப்படையில், ஜூலை 2024 முதல் தகுதியானவர்களுக்குப் பணம் செலுத்த நலன்புரி நன்மைகள் சபை தயாராக உள்ளது.

எங்களுக்கு 12,27,000 முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் கிடைத்துள்ளன. அவர்களில் சுமார் 11,97,000 பேர் தொடர்பில் இதுவரை பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகைக்கு மேலதிகமாக, அஸ்வெசும உதவிகள் உண்மையிலேயே தகுதியான ஒரு குழுவினருக்கு கிடைக்கவில்லை. முதல் கட்ட விண்ணப்பத்தில் அவர்களுக்கு விண்ணப்பப் படிவங்களை வழங்கப்படாமையினால், அவர்களுக்கு அஸ்வெசும பலன் கிடைக்கவில்லை.

அதன்படி, ஓன்லைன் ஊடாக மேற்கொண்ட பரந்த விழிப்புணர்வுக்குப் பிறகு 200,000 - 250,000 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளோம். இவ்வாறாக பிரதேச செயலகங்களுக்கு நேரடியாக வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தற்போது எமது மென்பொருளில் உள்வாங்கப்படுகின்றன. அதன்படி, இரண்டாம் கட்ட விண்ணப்பம் கோரல் 2024 மார்ச் 15 ஆம் திகதியுடன் நிறைவடையும். விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்காத எவரும் அஸ்வெசும பலன்களைப் பெற தகுதி பெறமாட்டார்கள் என்பதை வலியுறுத்த வேண்டும்.

மேலும், புதிய விண்ணப்பதாரர்களின் தரவு சரிபார்ப்பு மற்றும் சான்றுப்படுத்தல் என்பன நிறைவடைந்த பிறகு, 2024 ஜூன் முதல் 24 லட்சம் குடும்ப அலகுகளுக்கு அஸ்வெசும பலன்கள் வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான அஸ்வெசும தொகைக்காக 205 பில்லியன் ரூபாவை செலவிட எதிர்பார்க்கிறோம். அதனுடைய ஒதுக்கீடுகள் தற்போது முடிவடைந்துள்ளது.

மேலும், இதுவரை கிடைத்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளையடுத்து சுமார் 7,000 பேர் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தவறான தகவல்களை அளித்து நன்மைகளை அடைந்துள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான நபர்கள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொண்டுள்ளோம். அவர்களிடமிருந்து பணத்தை மீளப்பெறவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தயாராகி வருகிறோம்." – என்றார்.




# இந்தியக் கரையோரப் பாதுகாப்பு கப்பல்கள் இலங்கைக்கு வருகை

இந்தியாவின் இரண்டு கரையோரப் பாதுகாப்புக் கப்பல்கள் காலி மற்றும் கொழும்புத் துறைமுகங்களுக்கு சுற்றுலா மேற்கொள்வதற்காக வந்துள்ளன.

இந்தியாவின் கரையோர பாதுகாப்பு படைப்பிரிவிற்கு சொந்தமான சமர்த் எனும் கடல்சார் கண்காணிப்பு கப்பலும், அபினவ் எனப்படும் அதிவேக கண்காணிப்புக் கப்பலுமே வந்துள்ளன.

இந்தக் கப்பல்கள் நேற்று முன்தினம் காலி துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. இவை மார்ச் முதலாம் திகதி வரை காலியில் தரித்திருக்கவுள்ளன என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

மேற்படி கப்பல்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு முன்னதாக, மார்ச் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தரவுள்ளன.

இந்தியக் கரையோரப் பாதுகாப்புக் கப்பல்கள் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் தீயணைப்பு, சேதங்களைக் கட்டுப்படுத்துதல், சமுத்திர பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளன.

பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பு சவால்களை செயற்றிறன் மிக்க முறையில் எதிர்கொள்ளும் வகையில், இலங்கை கடலோரக் காவல்படையின் திறன்களை அதிகரிப்பதற்கு இந்தக் கப்பல்களின் வருகை உதவும் என இலங்கைக் கடற்படை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களில் இந்திய கடற்படைக் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளன எனவும், இரு நாடுகளுக்கும் இடையிலான கடற்படை நட்புறவை மேம்படுத்துவதே இதன் நோக்கம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிம்புலாபிட்டிய பட்டாசுத் தொழிற்சாலைத் தீ விபத்து: காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இருவர் மரணம்

கட்டான – கிம்புலாபிட்டியவில் அமைந்துள்ள பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவர்கள் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

16 மற்றும் 21 வயதுகளையுடைய இருவரே உயிரிழந்துள்ளனர்.

பட்டாசு தொழிற்சாலையின் உரிமையாளரின் மகனும் இவர்களில் உள்ளடங்குகின்றார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர் கிம்புலாபிட்டிய – வெரல்வத்த பகுதியை சேர்ந்தவராவார்.

அதிக உஷ்ணம் காரணமாக தீ பரவியிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணை; ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரிக்கும்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு எதிராக எதிர்க்கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை கருத்திற்கொள்ளாமல், இணையவழிப் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்ற சபாநாயகர் நடவடிக்கை எடுத்துள்ளார் என எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**29 - 06 - 1938**



**மறைவு**
**27 - 02 - 2024**

## கிளேடிஸ் புஷ்பராணி மதியாபரணன்

### இயேசுவின் திருக்கரங்களில் சரண்

எஸ்.எஸ்.மதியாபரணன் அவர்களின் அன்பு மனைவியும் சுமதி – ராஜன், சுமந்திரன் – சாவித்திரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஷாமந்தி, சஞ்சயன், ஷிலோ, ஷெக்கேம், ஷொலேம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஏ.வி.& லில்லி பொன்னு(குடத்தனை,பருத்தித்துறை) தம்பதியரின் அருமைமிகு புதல்வியும் காலஞ்சென்ற தேவி நல்லருளானந்தம், அலன் ஜெயராஜா (கனடா), சீ.பி. ஜெயசிங்கம் (சிங்கப்பூர்), பீ.ஜெயசுந்தரம் (ஜேர்மனி), புஷ்பசாந்தி பொன்னு ஆகியோரின் நேசம்மிக்க சகோதரியும் நல்லருளானந்தம், அலிஸ் தாமு (லண்டன்), மங்களநாயகி நவரட்னராஜா (லண்டன்), எஸ்.எஸ். பூரணம்பிள்ளை (அவுஸ்திரேலியா), ரதி ஜெயராஜா, ரூபிணி ஜெயசிங்கம், ரஞ்சினி ஜெயசுந்தரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

பூதவுடல் 29-02-2024 வியாழக்கிழமை மு.ப. 9.00 மணி முதல் பி.ப.9.00 வரையும், மீண்டும் வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணியிலிருந்தும் பொரளை ஏ.எப்.றேமன்ட் மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு பி.ப.4.00 மணி இறைவழிபாட்டின் பின் பி.ப. பி.5.00 மணிக்கு பொரளை, கனத்தை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# பசிபிக் பெருங்கடலில் உள்ள மெக்வாரி தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!

அவுஸ்திரேலியாவின் டாஸ்மேனியா மாகாணத்தின் ஒரு அங்கமான மெக்வாரி தீவுப்பகுதி, தென்மேற்கு பசிபிக் பெருங்கடலில் நியூசிலாந்து மற்றும் அண்டார்டிகாவுக்கு இடையில் அமைந்துள்ளது. இந்த தீவுப்பகுதியில் நேற்று காலை 5.56 மணிக்கு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.4 ஆக பதிவாகி இருந்ததாக அமெரிக்க புவியியில் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# ஐரோப்பிய ஒன்றியத்துக்கான புகலிட கோரிக்கை விண்ணப்பங்கள் 18 சதவீதத்தினால் அதிகரிப்பு



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்பிரனருக்கிடையிலான யுத்தத்தை அடுத்து, பாலஸ்தீனியர்களிடமிருந்து, ஐரோப்பிய ஒன்றியத்துக்கான புகலிட கோரிக்கை விண்ணப்பங்கள் அதிகரித்துள்ளன என்று ஏதிலிகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய முகவரகம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் ஐரோப்பாவில் புகலிட கோரிக்கையாளர்களுக்கான விண்ணப்பங்கள் 18 சதவீதத்தால் அதிகரித்து 1.14 மில்லியன் விண்ணப்பங்களாக அதிகரித்துள்ளன.

ஏதிலிகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய முகவரகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, சிரியர்கள், ஆப்கானியர்கள் மற்றும் துருக்கியர்கள் பாரியளவில் விண்ணப்பங்களை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றனர்.

இந்தநிலையில் கடந்த வருடம் பாலஸ்தீனில் இருந்து, ஏதிலிகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய முகவரகத்திற்கு புகலிடம் கோரி விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எனினும், அதிகமான ஏதிலிகளின் விண்ணப்பங்களை அங்கிகரிக்கும் நாடாக ஜேர்மனி பெற்றுக் கொள்ளும் என குறிப்பிடப்படுகிறது.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குகிறார் மிட்செல் ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிட்செல் ஒபாமா ஜனநாயக கட்சி சார்பில் களமிறங்கவுள்ளார் என கூறப்படும் நிலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 2024 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் நிலையில் தற்போது ஜனாதிபதி ஜோபைடன் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்தாலும் அவரது வயது மற்றும் உடல்நலம் கருதி அவருக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது என்று கூறப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிட முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிட்செல் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு ஆதரவு குவிந்து வருவதாகவும் இதனால் அவர் அதிபர் வேட்பாளராக அறிவிக்க வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மிட்செல் ஒபாமாவை அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கலாமா என்று எடுத்த கருத்து கணிப்புக்கு அதிக சதவீதம் வாக்கு மிட்செலுக்கு ஆதரவாக கிடைத்திருப்பதாகவும் எனவே அவருக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.



இதனால் ட்ரம்புக்கு எதிராக ஒபாமாவின் மனைவி மிட்செல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வாய்ப்பு இருப்பதாகவும் அவர் வெற்றி பெற்று அமெரிக்க ஜனாதிபதியாக வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# தேர்தல் முறைமை மறுசீரமைப்புக்கான பரிந்துரைகளைத் தர 3 உபகுழுக்கள்




தேர்தல் முறைமை மறுசீரமைப்பிற்காக ஒவ்வொரு துறை சார்ந்தும் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக 3 உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று அதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தேர்தல் முறைமைகள் மற்றும் அது தொடர்பான அரசமைப்பிற்கு உட்பட்ட சட்டக்கட்டமைப்பு தொடர்பான யோசனைகளை ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் மாதவ தேவசுரேந்ர தெரிவித்துள்ளார்.

ஊடக மதிப்பீடுகள், பெண்கள் பிரதிநிதித்துவம் ஆகிய விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து மற்றுமொரு உப குழு பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளது.

மற்றைய உப குழுவின் ஊடாக தேர்தலொன்று அறிவிக்கப்பட்டதன் பின்னர் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பொறுப்புகள், நடத்தை விதிமுறைகளை தயாரித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பிலான பரிந்துரைகள் முன்வைக்கப்படவுள்ளன என்று ஆணைக்குழுவின் செயலாளர் மாதவ தேவசுரேந்ர தெரிவித்துள்ளார்.

இந்தப் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் புதிய தேர்தல் முறைமை தொடர்பிலான முதல்கட்ட அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா, சிங்கப்பூர், கனடா, பிரித்தானியா, சுவிட்சர்லாந்து, எஸ்டோனியா ஆகிய ஜனநாயக தேர்தல் முறைமை காணப்படும் நாடுகளின் தேர்தல் முறைமைகளை ஆராயும் செயற்பாடு தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அந்தத் தேர்தல் முறைகளின் ஊடாக இலங்கையின் தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு கிடைக்கக் கூடிய முன்மாதிரி தொடர்பில் தெளிவைப் பெற்றுக் கொள்வது இதன் நோக்கமாகும் என ஆணைக்குழுவின் செயலாளர் மாதவ தேவசுரேந்ர தெரிவித்துள்ளார்.



# இந்திய மின் சக்தி அமைச்சின் பிரதிநிதிகள் இலங்கை வருகை

## அமைச்சர் கஞ்சன விஜேசேகரவுடன் சந்திப்பு

இந்திய மின் சக்தி அமைச்சின் செயலாளர் பங்கஜ் அகர்வால் தலைமையிலான குழுவினர் மூன்று நாள் விஜயமாக நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அவர்கள் மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவை அவரது அமைச்சில் நேற்றுச் சந்தித்தனர்.

இதன்போது, இந்தியாவுடன் திட்டமிடப்பட்டுள்ள மின் கட்டமைப்பை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம், 130 மெகாவாட் சம்பூர் மின்னுற்பத்தி செயற்றிட்டம், யாழ். மாவட்டத்தின் மூன்று தீவுகளில் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உத்தேச மின்மயமாக்கல் செயற்றிட்டங்கள் ஆகியன தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதனிடையே, இந்திய முதலீட்டில் முன்னெடுக்கப்படும் ஏனைய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி செயற்றிட்டங்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம், அவை செயற்படுத்தப்படவுள்ள கால அட்டவணை ஆகியன தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்திய மின்சக்தி அமைச்சு, இந்திய மத்திய மின்சார அதிகார சபை, இந்திய தேசிய நிலக்கரி வலுசக்தி நிறுவனம், பவர் கிரிட் நிறுவனம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ள குழுவில் உள்ளடங்கியுள்ளனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 29.02.2024




உங்கள் லட்சியங்களை பூர்த்தி செய்து கொள்ள இன்றைய நாளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தன்னம்பிக்கை அதிகமாக காணப்படும். கடினமான பணிகளையும் இன்று எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் பணியில் நீங்கள் மிகப் பெரிய வெற்றியை காண்பீர்கள். உங்கள் பணிகளை ஒழுங்கான முறையில் கவனமாக ஆற்றுவீர்கள். இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க நீங்கள் முயல வேண்டும். இதன் மூலம் உறவில் அன்பும் இதமும் உருவாகும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்று பண லாபம் காண புதிய முதலீடுகளில் பங்கு கொள்வது சிறந்தது.




இன்று அனுகூலமான பலன்கள் கிடைக்கும் நாள். சூழ்நிலைகள் உங்கள் வெற்றிக்கு சாதகமாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் தைரியத்துடனும் உறுதியுடனும் இருப்பீர்கள்.

இன்று விரைந்து வேலையை முடிக்க வேண்டும் என்று முனைவீர்கள். இதனால் நல்ல தரத்துடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு ஏற்படும்.

உங்களது வங்கியிருப்பு கணிசமாக உயரக் காணபீர்கள். கையிலுள்ள பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வது நல்லது. நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. இன்று சில எதிர்பாராத நன்மைகள் நடக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையாகப் பணியாற்றுவதற்கு இன்று பொறுமை அவசியம்.

உங்கள் அகந்தைப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனால் புரிந்துணர்வும் பாதிக்கப்படும். எனவே அகந்தைப் போக்கை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளதால் இன்று அமைதியாக இருக்கவும்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும். முக்கிய முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது. சிறந்த இசையைக் கேட்பது உங்களுக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் தரும்.

பணியிடச் சூழல் இன்று அனுகூலமாக இருக்காது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகள் சுமூகமாக நடக்க சக பணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாகவும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காகச் செய்யும் செலவாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கு சாதகமான நாள். இன்று செயல்கள் அனைத்தும் சுமூகமாக நடக்கும். ஆன்மீக ஈடுபாடு நன்மை பயக்கும். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள இன்றைய நாளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று நீங்கள் உங்கள் திறமையைப் பயன்படுத்தி பணியாற்ற வேண்டும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

இன்றைய நாளை மகிழ்ச்சியான நாளாக ஆக்கலாம். பயணங்கள் மூலம் இது சாத்தியம். உங்கள் துணையுடன் நேர்மையாக விசுவாசமாக நடந்துகொள்ள இது தக்க சமயம். இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். இன்று கடினமான சூழல் காணப்படும். நீங்கள் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்குத் தள்ளிப் போடவும். உங்கள் எதிர் காலம் குறித்த தேவையற்ற பயம் காரணமாக பணியிடத்தில் பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அமைதியாகவும் உற்சாகத்துடனும் பணியை மேற் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது இருவருக்குமிடையிலான நல்லுறவையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

வீட்டின் புனரமைப்புக்காக அல்லது புதுப்பிப்பதற்காகப் பணம் செலவு செய்வீர்கள். பணம் சேமிக்கும் வாய்ப்புக் குறைவாக இருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன் கிட்டாது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பிரார்த்தனை மற்றும் ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது பொறுமை தேவை. உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில தொந்தரவுகளை எதிர் கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது இருவருக்குமிடையிலான நல்லுறவையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது. பண வரவு காணப்பட்டாலும் தொடர்ந்து செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் பணம் சேமிக்கும் வாய்ப்பு குறைந்து காணப்படும். முறையாகத் திட்டமிட வேண்டியது அவசியம்.




உங்கள் இலக்குகளை அடைவதில் இன்று தாமதம் ஏற்படும். எனவே உங்கள் இலக்குகளைச் சிறப்பாகத் திட்டமிட வேண்டியது அவசியம். இன்று சில மாற்றங்கள் ஏற்படும். அனால் அவை முழு அளவில் நன்மை அளிக்காது.

பணியிடத்தில் பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழல் சவாலானதாக இருக்கும். பக்குவமான மனநிலையில் பணிகளை மேற்கொள்ளுங்கள்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் பெரிதாக நோக்கும் மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடன் வேறுபாடு ஏற்படும். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இந்தப் போக்கைத் தவிர்க்க வேண்டும்.

இன்று சில கூடுதல் செலவுகள் காணப்படும். பண வரவை ஏற்படுத்த அதிர்ஷ்டம் அனுகூலமாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.02.2024


தனுசு

இன்று பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாக வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உற்சாகமான மனநிலை காரணமாக அவருடன் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்துகொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். பணத்தை சுப காரியங்களுக்கு செலவு செய்யும் வாய்ப்பு உள்ளது.

இன்று தைரியமாகவும் உற்சாகமாகவும் இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


கும்பம்

இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. எதிர்காலம் குறித்த கவலையும் பயமும் காணப்படும். பிரார்த்தனை மற்றும் தியானம் சிறந்த பலன் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி திறமையாக சவால்களை கையாள வேண்டும்.

உங்கள் துணையிடம் நம்பிக்கையான இனிமையான உணர்வு கொள்ள வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் பாதுகாப்பின்மை உணர்வை தவிர்க்க வேண்டும். இதன் மூலம் இருவருக்கும் இடையிலான உறவில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பண வரவு காணப்படாது.


மகரம்

இன்று மகிழ்ச்சியான உற்சாகமான தருணங்கள் காணப்படும். உங்கள் சுய முயற்சி மூலம் நீங்கள் வளர்ச்சி காண்பீர்கள். இன்று வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி உங்களிடம் காணப்படும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். ஒழுங்கு முறையான அணுகுமுறை உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் உண்மையான அன்பை வெளிப்படுத்தி மகிழ்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களின் நம்பிக்கை உணர்வு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


மீனம்

இன்றைய சூழல் அதிருப்தியை அளிக்கும். அதிகமான சிந்தனையைத் தவிர்க்க வேண்டும். சமநிலையோடு இருக்க வேண்டும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் விரும்பத்தகாத சூழல் காணப்படும். எனவே பணியிடத்தில் ஒழுங்குமுறையுடன் பணியாற்ற வேண்டியது நல்லது.

உங்கள் துணையுடன் குழப்பமான மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். அதனை தவிர்த்து உற்சாகமாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள்.

இன்று பண இழப்பை சந்திக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தைக் கையாளும் போது கூடுதல் கவனம் தேவை.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.

